**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Peer-Reviewed | Open Access | Crossref DOI & Global Indexing | Google Scholar Impact Factor
DOI: https://doi.org/10.63300/kijts15sp012026.79
https://ngmtamil.in/

# திருவாசகத்தில் மாணிக்கவாசகர் வெளிப்படுத்தும் மெய்ப்பாடுகள்

**திருமதி. த. மஞ்சுளா,**
பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர் தமிழ்த்துறை தட்சஷீலாப் பல்கலைக்கழகம்
ஓங்கூர், திண்டிவனம் - 604305. Tel: 8072865883.

**முனைவர் ஜெ. ஜெயபிரதா,**
நெறியாளர் உதவிப் பேராசிரியர் தட்சஷீலாப் பல்கலைக்கழகம்
ஓங்கூர், திண்டிவனம் 604305.

**முன்னுரை:-**

பண்டையத் தமிழர்களின் பல சங்க கால விழுமியங்களுக்கு சார்பாகவும், வைணவ சமயம், சைவ சமயம் ஆகியவற்றை முன்னிறுத்தியும், அக்காலத் தமிழரிடையே செல்வாக்கு பெற்றிருந்த சமண, பௌத்த சமயங்களுக்கு எதிராகவும் தமிழ்ப் பக்தி இயக்கம் அமைந்தது. தமிழ்ப்பக்தி இயக்கங்கள் என்பது சைவ, வைணவம் என இரு சமயத்தினையும், வளர்க்க பல்வேறு இலக்கியங்களையும் படைத்தனர். இதன்வழி ஆன்மிகப் பெரியோர்கள் பக்தியினை வெளிப்படுத்தவும், மக்களை நல்வழியில் நெறிப்படுத்தி உற்றதுணையாக இருந்தவை பக்தி இலக்கியங்களே ஆகும். அந்த வகையில் சைவ சமயக் குறவர்களில் ஒருவரான மாணிக்கவாசகரின் திருவாசகப் பாடலில் வெளிப்படும் பக்தியினை ஆய்வதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

**ஆய்வின் நோக்கம்:-**

மாணிக்கவாசகர் பாண்டிய நாட்டுத்திருவாத **ஊரில்** பிறந்தவர். இவர் அறிவாற்றலால் சிறந்து விளங்கியதால் அரிமர்த்தன பாண்டியனிடம் அமைச்சராகப் பணிபுரிந்தபோது சிவனின் மீது மிகுந்த பக்தி கொண்டவராக இருந்ததால் சிவ பக்தர்களுக்கு. பல தொண்டுகளை செய்த நிளையில் சிவபெருமான் திருப்பெருந்துறையில் குருந்த மரத்தடியில் இவரை ஆட்கொண்டதாக வரலாற்றுச் செய்திகள் கூறுகின்றன. இவர் இயற்றிய நூல்களான திருவாசகம், திருக்கோவையார் எட்டாம் திருமுறையாக தொகுக்கப்பட்டுள்ளன.

"திருவாசகத்திற்கு உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார்"

என்பது மூதுரையின் வாக்கு. இராமலிங்க வள்ளலாரும் இதனையே கூறுகின்றார்.

"ஊன் கலந்து உயிர் கலந்து இனிப்பதுவே"

என இராமலிங்கனார் கூறுகிறார்.

"திருவாசகம் ஒருகால் ஓதின் கருங்கல் மனமும் கரைந்துருகும்"

என நால்வர் நான்மணி மாலை கூறுகின்றது.

திருவாசகத்தின் அமைப்பு:-

திருவாசகமானது சிவபுராணம் முதலாக அச்சோப்பதிகம் ஈறாக ஐம்பத்தொரு புதிகங்களையும் அறுநூற்று ஐம்பத்தாறு பாடல்களையும் கொண்டிருப்பதுடன் சிவபெருமானால் போற்றிப் பரவும் பக்தி நூலாகவும் விளங்குகின்றது. மணிவாசகம், மதுரவாசகம், வாசகத்தேன் எனப் பல பெயர்களாலும் திருவாசகம் அழைக்கப்படுகிறது.

திருவாசகம் என்பதற்கு 'திரு' என்றால் அழகு, வாசகம் என்பது வார்த்தை அல்லது சொல் எனப்படும். எனவே அழகிய சொற்களைக் கொண்ட நூல் திருவாசகம். திரு என்பது அருள், வாசகம் என்பது வாக்கு. எனவே அருள்வாக்கு என்றும் விளக்கம் கூறுகின்றனர்[1]. [ச. தண்டபாணி தேசிகர், திருவாசகப் பேருரை ப-08]

மாணிக்கவாசகர் தான் மட்டும் தனிநிலையில் உணர்ந்த திருவருள் அனுபவத்தை தம்முடைய உள்ளத்தில் எழுந்தபடியே கவிதைச்சுவை பொதிந்த சொற்களால் ஆன்மாவின் வரலாறாகத் திருவாசகத்தை மாணிக்கவாசகர் படைத்துள்ளார்.

மெய்ப்பாடு என்பதன் பொருள்:-

மெய்ப்பாடு என்பதற்கு 'வெளிப்பாடு' என்பது பொருளாகும். சுவை என்றாலும் மெய்ப்பாடு என்றாலும் ஒன்றேயாகும். சுவையுணர்ச்சியே விருப்பு வெறுப்புகளைத் தந்து மெய்க்குறிகளுடன் வெளிப்படுவதாதலின் சுவைக்கு மெய்ப்பாடு என்றும் பெயராயிற்று எனலாம்.

நாவாகிய பொறிகளினால் அறியப் பெறும் இனிப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, உறைப்பு என்கின்ற சுவைகள் போன்று கண்ணிலும், செவியிலும் அறியப்பெறும் சுவைகள் எட்டாகும். இவைகளைத் தொல்காப்பியர் 'மெய்ப்பாடு' மெய்ப்பாடு என்பார். அவர் எண்வகை மெய்ப்பாடுகளையும்.

"நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று
அப்பா லெட்டே மெய்ப்பாடென்ப" [2]

(தொல். பொருள். நூற் 252)

என்ற நூற்பாவால் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். எண்வகை மெய்ப்பாடுகளில் முதலாவது அமைவது நகையாகும்.

1. நகை:-

திருவெம்பாவையில், விடியற்காலையில் எழுந்த மகளிர், எழாமல் தூங்கிக் கொண்டிருக்கும் தலைவியைப் பார்த்து,

"ஒன்நித் தில நகையாய் இன்னும் புலர்ந்தின்றோ[3]"

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

(திருவாசகம், திருவெம்பாவை, பா- 14)

என்றும், வேறொருத்தியை.

"மானே நீ நென்னலை நாளை வந்துங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசை பகராய் இன்னும் புலர்ந்தின்றோ" [4]

(திருவாசகம், திருவெம்பாவை பா- 6)

என்று வினவுதலும் என்னலாகிய நகைப்பை எடுத்தியல்புவதாக.

நீத்தல் விண்ணப்பம் பகுதியில் அமைந்த பாடலில் மாணிக்கவாசகர் இறைவனை நோக்கி 'சிவபெருமானே! என்னைக் குற்றம் செய்தவர் என்று நீ வெறுத்து ஒதுக்கினால், உன்னை ஊரார் பழித்து நகைகிடும் படி' செய்துவிடுவேன் என்பதனை.

"சிரிப்பின் சீறும் பிழைப்பைத்
தொழும் பையு மீசற் கென்று
விரிப்ப னென்னை விடுதிகள்" [5]

(நீத்தல் விண்ணப்பம் பா- 49)

என்று செய்யுளில் அறிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது.

**2.** அழுகை:-

மாணிக்கவாசகரின் நீத்தல் விண்ணப்பத்தில் இறைவன் மீதான தமது களங்கமற்ற அன்பினை வெளிப்படுத்தும் போதும், தமது தவறுகளைக் குறைபட்டுக் கொள்ளும் போது,

நாயிற்கடையாய்க் கிடந்து அடியேன் [6]

அங்காடி நாய்ப்போல் அலைந்தலையே [7]

"பித்தனேன் பேதைகன் பேவேன் நாவேன்
பிழைத்தணகள் எத்தனையும் பொறுத்தாயன்றே" [8]

என்பன இயலா மையால் வெலிப்படும் அழுகையாக வெளிப்படுகின்றன.

**3.** இளிவரல் :-

"எண்ணிலேன் திருநாமம் அஞ்சு எழுத்தும் என்
ஏழைமை அதனாலே
நண்ணிலேன் கலை ஞானிகள் தம்மொடு" [9]

(அதிசயப்பத்து பா-06)

இப்பாடலில் இறைவனின் திருநாமத்தை நான் எண்ணினேன் இல்லை. இதைத்தான் செய்யவில்லை யென்றாலும் ஞானிகள் அருகில் சென்று என் அறிவையும் வளர்த்துக் கொள்ளவில்லை ஆதலால், பக்திவழி, ஞானவழி ஆகிய இரண்டும் அடைப்பட்டுவிட்டன கூறுவதால் வருத்தம் பற்றிய இளிவரலாக இப்பாடல் அமைந்துள்ளது.

**4.** மருட்கை **:-**

கீழ்மகனென்று அறிந்திருந்தும் அது பற்றிக் கவலையுறாமல் மேன்மக்களினும் மேன்மக்கள் பெறவேண்டிய பதத்தை ஒரு வினாடியில் நல்கிவிட்ட சிவனை நினைத்து வியப்படைவதனை

"புலையனேனையும் பொருள் என நினைந்து உன்
அருள் புரிந்தனை புரிதலும் களித்துத் [10]
தலையினால் நடந்தேன் விடைப் பாகா..."

(செத்திலாப்பத்து பா-03)

என்ற பாடலின் மூலம் காண முடிகின்றது.

**5.** அச்சம் **:-**

மாணிக்கவாசகர் தன்னைத் சிறுமைத் தன்மையுடையோன் என்று நினைத்து, இறைவன் கைவிட்டு விடுவானோ என்ற பய உணர்வினால் பாடிய பாடல்களை நீத்தல் விண்ணப்பம், அச்சப்பத்து முதலான பகுதிகளில் காணக் கூடியதாக உள்ளது. இதனை பின்வரும் பாடலின் வழி அறியலாகும்.

"கடையவருணனைக் கருணையினால்
கலந்து ஆண்டு கொண்ட
விடையவனே விட்டிருதி கண்டாய்" [11]

(நீத்தல் விண்ணப்பம் பா- 01)

**6.** பெருமிதம் **:-**

அறிவு, ஆண்மை, பொருள் முதலிய சிறப்புகளால் மனித மனங்களில் உயர்ந்து நிற்பது பெருமிதமாகும். 'சென்னிப்பத்து', பிடித்தபத்து, கோயில் முத்த திருப்பதிகம் முதலான பகுதிகளில், பெருமிதம் சார்ந்த உணர்வுகளால் இடம் பெற்று பாடல்கள் இடம் பெற்றுள்ளன.

"இம்மையே உன்னை சிக்கேனப்பிடுத்தேன்
எங்கெழுந் தருடுவது இனியே" [12]

(பிடித்த பத்து 03 )

"மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்தேன்
மனத்திடை மண்ணிய மன்னே" [13]

(கோயிற்றிருப்பதிகம் பா- 5)

என்னும் பாடல்களில் அறிவின் காரணமாக வந்த பெருமித உணர்வைக் கண்டுக் கொள்ள முடிகின்றது.

**7.** வெகுளி **:-**

அறிவு, புகழ் ஆகியவற்றைப் அழித்துப் பேசுவதால் வெகுளி தோன்றுவது இயல்பாகும், அதனை,

"வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே வல்வினைப்பட்டு
ஆழ்கின்றாய் ஆழாமக் காப்பானை ஏத்தாதே

சூழ்கின்றாய் கேடு உனக்குச் சொல்கின்றேன் பல்காலும்" [14]

(திருச்சதகம் பா- 20)

என்று பாடலில் மாணிக்கவாசகர், நெஞ்சை நோக்கி, வாழ்வது போல் நினைத்து வாழாது இருக்கின்றாயே! நான் உன்னை வற்புறுத்திச் சொல்லியும், இறைவனை வழிபடுதல், இல்லாமல், உனக்கு நீயே கேடு சூழ்ந்து துன்பக் கடலில் விழுந்து அழுகின்றாய் எனத் தனது மனத்தைக் கடிந்து கொள்வதால் வெகுளிச் சுவைக்கு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

**8.** உவகை **:-**

மகிழ்ச்சியை ஏற்படுத்துவது உவகையாகும். "காமம் முதலிய மகிழ்ச்சி" என்று கூறுவார் ந.சங்கித ரெட்டியார் மாணிக்கவாசகர் உலகத்தாரிடையே காணப்படும் உண்மையான காமச்சுவையை,

"...... சோரணோன் அங்கு ஒருத்திவாய்
அடித்த வாறும் துகில் இறையே
சோர்ந்து வாறும் முகம் குறுவேர்
பொடித்த வாறும்" [15]

(திருச்சதகம் பா- 57)

என்னும் திருவாசகப் பாடலில் புலப்படுத்துகிறார். உவகைச் சுவையில் விளையாட்டால் வரும் உவகை ஒரு பகுதியாக உள்ளது.

முடிவுரை**:-**

மாணிக்கவாசகர் தன் பக்திப் பாடலான திருவாசகத்தில் தனது பக்தியினை வெளிப்படுத்தும். போது, தொல்காப்பியர் கூறிய எண்வகை மெய்ப்பாட்டுக் கோட்பாடுகளைக் கையாண்டு இருப்பதே இன்றளவும் மக்களின் மனதில் நீங்கா இடம் பெற்றிருப்பதற்கும் சான்றாகும். இத்தகைய பக்திப் பாடல்களைப் பாடி இறைவனை சர்ணாகதி அடைதளே மனிதப் பிறவியின் பெற்ற பேறாகும்.

அடிக்குறிப்புகள் **:-**

1. ச. தண்டபாணி தேசிகர், திருவாசகப் பேருரை ப-08

2. தொல். பொருள். நூற். 252

3. திருவாசகம், திருவெம்பாவை பா. 14

4. திருவாசகம், திருவெம்பாவை பா- 6

5. நீத்தல் விண்ணப்பம் பா. 49

6. திருவாசகம், சிவபுராணம் வரி- 60

7. பட்டினத்தார் பாடல் பா- 01

8. நாவுக்கரசர் தேவாரம் 4:95:8

9. திருவாசகம், அதிசயப்பத்து பா. 06

10. திருவாசகம் செத்திலாப்பத்து பா. 03

11. நீத்தல் விண்ணப்பம் பா. 01
12. திருவாசகம், பிடித்தபத்து பா. 03
13. திருவாசகம், கோயிற்திருப்பதிகம் பா- 5
14. திருவாசகம், திருச்சதகம் பா- 20
15. திருவாசகம், திருச்சதகம் பா. 57

**துணைநூற்பட்டியல்**:

[1.] இளம்பூரணர் (உரையாசிரியர்) தொல்காப்பிய பொருளதிகாரம், கழக வெளியீடு

[2.] சுப்பிரமணிய பிள்ளை.கா.(. உரையாசிரியர்) திருவாசகம் மூலமும் உரையும், பாரி நிலையம்,600108

[3.] தண்டபாணி தேசிகர்.ச. திருவாசகப் பேருரை, ஆதீன வெளியீடு

[4.] நடராசன் பி.ரா(.2004) திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம் 4,5,6 திருமுறைகள் வரலாற்று முறையில் மூலமும் உரையும், சென்னை, உமா பதிப்பகம்.

[5.] 5.பட்டினத்தார் பாடல்கள் பதினாறாவது திருமுறை.